16.07.2025



## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

## அசல் வழக்கு எண்.137/2017

## பி.வா.சா. 1–பானுமதி, க/பெ.கிருஷ்ணசாமி

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் தாய் தந்தையருக்கு சொந்த ஊர் அரியலூர் மாவட்டம், அருங்கால் கிராமம் ஆகும். என் கணவர் கிருஷ்ணசாமியின் சொந்த ஊர் அரியலூர் மாவட்டம் அருங்கால் கிராமம் ஆகும். எனக்கு துறையூர் பூர்வீமான ஊர் கிடையாது, பிழைப்பிற்காக வந்த ஊர். வருடம் நினைவில்லை, ஆனால் 25 ஆண்டுகளுக்கு முன்பு துறையூருக்கு பிழைப்பிற்காக வந்தோம். துறையூர் வருவதற்கு முன்பு கீரம்பூர் காலனியில் வசித்து வந்தோம். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வெங்கிடுசாமி நாயுடுக்கு, ராமசாமி நாயுடு, அழகிரிசாமி நாயுடு, ரெங்கராஜ் நாயுடு ஆகியோர்கள் அவருடைய மக்கள் என குறிப்பிட்டுள்ளேன், அவர்களை நேரில் பார்த்தது உண்டா என்றால் இல்லை. தாவா சொத்து வெங்கிடுசாமி நாயுடு பெயரில் உள்ள பத்திரத்தை நீங்கள் பார்த்தது உண்டா என்றால் பார்த்தது கிடையாது.

16.07.2025



வெங்கிடுசாமியின் மக்கள் ராமசாமி நாயுடு, அழகிரிசாமி நாயுடு, ரெங்கராஜ் நாயுடு ஆகியோர்கள் 1981ம் ஆண்டு பாகம் செய்து கொண்டார்கள், அது நேரில் தெரியாது என்று சொன்னால் சரிதான். ஆனால் எனக்கு கிரையம் கொடுத்தவர் என்னிடம் சொன்னார். எனக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்தவர் சந்திரசேகரன் நாயுடு, த/பெ. ரெங்கராஜ் நாயுடு ஆகும். எனக்கு கிரையம் கொடுத்த சந்திரசேகரனின் தகப்பனார் ரெங்கராஜ் நாயுடு எந்த ஊரில் வசித்து வந்து இறந்துபோனார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் சந்திரசேகரன் என்பவர் கல்லக்குடி பலங்காநத்தம் கிராமத்தில் வசித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்துடன் இணைக்கப்பட்ட ரெங்கராஜ் நாயுடுவின் இறப்பு சான்றிதழில் அவர் இறந்த கிராமம் கல்லக்குடி பலங்காநத்தம் கிராமம் என்று சொன்னால் சரிதான். எனக்கும், எனக்கு கிரையம் கொடுத்த சந்திரசேரகனுக்கும் முன்விரோதம் கிடையாது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.8 கிரையாவணத்துடன் ரெங்கராஜ் இறப்பு சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது, ஆனால் சந்திரசேகரனின் வாரிசு சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

எனக்கு கிரையம் கொடுத்த சந்திரசேகரனின் தகப்பனாருக்கு ரெங்கராஜ்–க்கு சந்திரசேகரன் மட்டும் தான் வாரிசு என்று எதன் அடிப்படையில் சொல்கிறீர்கள் என்று சொன்னால் கிரையம் கொடுத்த சந்திரசேகரனின் தகப்பனார் ரெங்கராஜ்வுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உண்டு, அவர்களுக்கு சந்திரசேகரனின் தகப்பனாரே சொத்து கொடுத்துவிட்டார். நான் படிக்கவேயில்லை. பி.வா.சா.ஆ.8 கிரையாவணத்தில் நான் சொல்வதுபோன்று சந்திரசேகரனின் அக்காமாவர்களுக்கு அவருடைய தகப்பனார் ரெங்கராஜ் சொத்து சம்மந்தமாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் இவ்வாறு பெண் பிள்ளைகளுக்கு சொத்து கொடுத்தது சம்மந்தமாக சந்திரசேகரன் பத்திரம் வைத்துள்ளார். அவ்வாறு சொல்லப்பட்ட சந்திரசேகரன் வைத்துள்ள பத்திரத்தை நீங்கள் பார்த்தது உண்டா என்றால் இல்லை. நான் சொல்வது போன்று எனக்கு கிரையம் கொடுத்த சந்திரசேகரனின் தகப்பனார் ரெங்கராஜ்வுக்கு இரண்டு பெண்கள் இருந்ததாக பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.8 கிரையம் ஆவணத்தில் ரெங்கராஜ்வின் ஏகவாரிசு என சந்திரசேகரன் எனக்கு எழுதிக்கொடுத்த இந்த ஆவணம் மோசடியான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

16.07.2025



கிரையம் கொடுத்த சந்திரசேகரன் பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள சொத்து அதாவது தாவா சொத்து எந்த வருடம் ரெங்கராஜ்வுக்கும், அழகிரிசாமிக்கும் பாகம் நடந்ததாக என்னிடம் சந்திரசேகரன் தெரிவித்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது, ரெங்கராஜ்வுக்கு தான் தெரியும். நான் சொல்வது போன்று ரெங்கராஜ்வுக்கும், அழகிரிசாமிக்கும் வாய்க்காரராக பாகபிரிவினை ஏற்பட்டது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல, சந்திரசேகரன் என்னிடம் சொல்லியுள்ளார். நடக்காத பாகபிரிவினை நடந்ததாக சந்திரசேகரன் என்னிடம் தெரிவித்து என்னை ஏமாற்றியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.T. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.